Ontario

# NEWS

Ministry of Finance

## ஒன்ராறியோவின் செயற் திட்டம்: COVID-19 க்கு முகம் கொடுத்தல்

*முதல்வர் Ford மற்றும் அமைச்சர் Phillips ஆகியோர் மேலதிகமான சுகாதாரப் பராமரிப்பு வளங்களையும் மக்கள், வேலைகள் மற்றும் முதலாளிகளுக்கான ஆதரவு என்பவற்றையும் அறிவிக்கின்றனர்*

**செய்திகள்** மார்ச் 25, 2020

ரொறன்ரோ - இன்று, நிதியமைச்சர் Rod Phillips ஒன்ராறியோவின் செயற்திட்டத்தை வெளியிட்டார்: *COVID-19 க்கு முகம் கொடுத்தல்.(மார்ச் 2020 பொருளாதாரம் மற்றும் நிதி சார்ந்த மேம்படுத்தல்)*

அரசாங்கத்தின் செயற் திட்டம் COVID-19 க்கு முகம் கொடுப்பதற்கான முதற் படியாகும், அத்துடன், சுகாதாரப் பராமரிப்புத் துறைக்கும், மக்கள் மற்றும் தொழில்களுக்கு நேரடியாக உதவுவதற்கும் வேண்டிய மேலதிக வளங்களுக்காக ஒதுக்கப்படும் $7 பில்லியன் தொகை இதில் உள்ளடங்கும். மேலும், வரி மற்றும் பிற ஒத்திவைப்புகள் மூலம் மக்களுக்கும் வணிகங்களுக்கும், அவர்களின் பணப்புழக்கத்தை மேம்படுத்துவதற்கும், வேலைகள் மற்றும் குடும்ப வரவு செலவுத் திட்டங்களைப் பாதுகாப்பதற்கும் என $10 பில்லியன் தொகை உதவியினையும் இது வழங்கும்.

இந்த $17 பில்லியன் தொகை உதவி நடவடிக்கையானது, எமது சுகாதார அமைப்பு, சமூகங்கள் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் முன்னுள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில் நிலைநிறுத்தப்படுவதனை, உறுதி செய்வதற்கான முக்கியமான முதற் படியாகும். இத்திட்டம் வரலாற்று ரீதியான விவேகத்துடன், மேலதிக சுகாதாரப் பராமரிப்பு முதலீடுகளின் ஒரு பகுதியாக அர்ப்பணிக்கப்பட்ட $1 பில்லியன் COVID-19 இடைக்கால ஏற்பாட்டு நிதி, அத்துடன் முன்னெப்போதும் இல்லாத வகையில் $2.5 பில்லியன் ஒதுக்கீட்டுத் தொகை, மற்றும் மாறிவரும் உலகளாவிய சூழ்நிலைகளுக்கு ஈடு கொடுப்பதற்காக அதிகரிக்கப்பட்ட இடைக்கால ஏற்பாட்டு நிதியாக $1.3 பில்லியன் தொகை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

ஒன்ராறியோ மக்களின் உடல்நலம் மற்றும் நல்-வாழ்வைப் பாதுகாப்பதற்காக, $3.3 பில்லியன் தொகையை, மேலதிக சுகாதாரப் பராமரிப்பு வளங்களுக்கென இத் திட்டம் உள்ளடக்கியுள்ளது.

"நிதி அமைச்சர் என்ற முறையில், முன்னணி-நிலையில் உள்ள எமது சுகாதாரப் பராமரிப்பு நிபுணர்களுக்கு, COVID-19 பரம்பலை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான வளங்கள் இருப்பதனை உறுதிசெய்வதே எனது முதலாவது

முன்னுரிமையாகும்" என அமைச்சர் Phillips கூறினார். "ஒன்ராறியோவின் மக்கள் தங்கள்  உடல்நலம் மற்றும் நல்-வாழ்வைப் பாதுகாப்பதற்கு, எதனை வேண்டுமானாலும் நாம் செய்வோம் என்ற நம்பிக்கையுடன் இருக்க முடியும். இந்த மேலதிக வளங்கள் மருத்துவமனையின் இடவசதியை  மேம்படுத்துவதோடு, எங்கள் அன்புக்குரியவர்களை நீண்ட-காலப் பராமரிப்பில் வைத்துப் பாதுகாப்பதற்கும், எங்கள் பொது சுகாதார அதிகாரிகளின் குறைவை நிறைவாக்குவதற்கும், நோய்ப்பரம்பலைக் குறைப்பதற்கும் உதவும்."

**உடல்நலம்**

- COVID-19 பரம்பலுடன் தொடர்புடைய வெளிவந்து கொண்டிருக்கும் தேவைகளுக்காக, அர்ப்பணிக்கப்பட்ட $1.0 பில்லியன் தொகையை COVID-19 இடைக்கால ஏற்பாட்டு நிதிக்கென உறுதியளித்தல்.
- மருத்துவமனைத் துறைக்கு $935 மில்லியனை முதலீடு செய்தல், அரசாங்கத்தின் உறுதிப்பாட்டின் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி இடவசதிப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக $594 மில்லியன், அத்துடன் குறுகிய காலப் பராமரிப்புக்காக 1,000 மற்றும் தீவிர பராமரிப்புக்காக 500 எனும் எண்ணிக்கையில் மேலதிகமான படுக்கைகளுக்கும்,  மேலதிக மதிப்பீட்டு மையங்களுக்கும் என $341 மில்லியன் ஆகிய தொகைகளை இது உள்ளடக்கும்.
- COVID-19 கண்காணிப்பு, கடுங்கண்காணிப்பு அத்துடன் ஆய்வக மற்றும் வீட்டுச் சோதனைகளுக்கு உதவுவதற்காகவும், அதே சமயத்தில் இணையவழிப் பராமரிப்பு மற்றும் Telehealth Ontario (டெலிஹெல்த் ஒன்ராறியோ) ஆகியவற்றில் முதலீடு செய்வதற்காகவும், பொது சுகாதார நிதியை மேலதிகமாக $160 மில்லியன் தொகையால்  அதிகரித்தல்.
- நீண்ட-காலப் பராமரிப்புத் துறையில் இடவசதியை அதிகரிப்பதற்காகவும், அத்துடன் 24/7 நேரத்துக்கும் நோய்த்தாக்கம் அறியும் சோதனைக்கான நிதி, தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அதிக பணியாளர்களை வேலைக்கமர்த்தல் மற்றும் COVID-19 பரம்பலைச் சமாளிக்க உதவும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிலும் $243 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- COVID-19 ஐ சமாளிக்க முன்னணி-நிலையிலுள்ள பராமரிப்பு ஊழியர்களுக்குத், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அதிமுக்கியமான மருத்துவ சாதனங்களை வழங்குவதற்கு $75 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.

செயற் திட்டத்தின் ஒரு பகுதியாக, மக்களுக்கு நேரடியாகவும் அவசரமாகவும் உதவுவதற்கும், தொழில்களைப் பாதுகாப்பதற்கும் என மாகாண அரசும் $3.7 பில்லியன் தொகையை அறிவித்தது.

"இந்த உலகளாவிய தொற்றுப் பரம்பலின்போது, ஒன்ராறியோ மக்கள் தங்கள் உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும் என நான் விரும்புகின்றேன் -- அவர்கள் வேலை இழப்பதைப் பற்றி  அல்லது எதிர்பாராத மேலதிகமான செலவுகளைச் சமாளிக்கும்போது எவ்வாறு முடிவெடுப்பது என்பது பற்றியெல்லாம் கவலைப்படக்

கூடாது" என்று அமைச்சர் Phillips கூறினார். "ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் இலகுவாகச் சமாளித்து நிர்வகிக்க நாம் உதவுகின்றோம், அதே நேரத்தில் மிகக் கூடிய தேவையில் இருப்பவர்களுக்குக் கூடுதல் ஆதரவையும் நாம் வழங்குகின்றோம்."

COVID-19 பரம்பலுக்கான எதிர்கொள்ளலை வலுப்படுத்தவும், மக்கள், குடும்பங்கள், தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளுக்கு ஆதரவளிக்கவும் அரசாங்கத்தின் திட்டத்தின் முக்கியமான முயற்சிகள் பின்வருமாறு:

**மக்கள் மற்றும் தொழில்கள்**

- COVID-19 பரம்பலின் போது பாடசாலை மற்றும் சிறுவர் பராமரிப்பகம் ஆகியன மூடப்பட்டதனால் ஏற்பட்ட கூடுதல் செலவுகளுக்காக குடும்பங்களுக்கு உதவுவது, 12 வயதுக்குட்பட்ட பிள்ளை ஒன்றுக்கு $ 200, மற்றும் தனியார் பாடசாலைகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் உட்பட சிறப்புத் தேவைகள் உள்ளவர்களுக்கு $ 250 எனும் தொகையை ஒரு-தடவைக் கொடுப்பனவாக வழங்கி உதவுதல்.
- குறைந்த-வருமானம் உடைய முதியோருக்கான Guaranteed Annual Income System (GAINS – உத்தரவாத வருடாந்த வருமானம்) கட்டணத்தை ஆறு மாதங்களுக்கு இரட்டிப்பாக்குமாறு முன்மொழிதல்.
- 2020-21 ஆண்டு மின்சார செலவு நிவாரணத் திட்டங்களுக்கு சுமார் $5.6 பில்லியனை வழங்குவதன் மூலம், தகுதி வாய்ந்த குடியிருப்பு, பண்ணை மற்றும் சிறு வணிக நுகர்வோருக்கு மலிவு விலையில் மின்சாரக் கட்டணங்களை வழங்கி ஆதரித்தல்.
  இது 2019 வரவுசெலவுத் திட்டத்துடன் ஒப்பிடும்போது சுமார் $1.5 பில்லியன் தொகை அதிகரிப்பாகும்.
- குடியிருப்பு, பண்ணை மற்றும் சிறு வணிகங்களைச் சேர்ந்த நேரம்-கருதிப்-பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு ஆஃப்-பீக் விலை என அழைக்கப்படும் ஆகக் குறைந்த விலையில் மின்சார விலையை நிர்ணயிப்பதன் மூலம், கட்டுப்படியாகும் விலையில் மின்சாரக் கட்டணங்களை வழங்கி ஆதரித்தல், 45 நாட்களுக்குத் தினம் 24 மணிநேரமும் இந்த விலையை அறவிடுவதனால், நேரம்-கருதிப்-பயன்படுத்துவோர் COVID-19 பரம்பலுக்கு ஈடு கொடுக்கும் வேளையில், பகல்நேர மின்சாரப் பயன்பாட்டினை அதிகரிக்கும்போது, அவர்களின் பயன்பாட்டு-நேரக்-கட்டணம் குறித்த கவலைகளை நிவர்த்தி செய்கிறது.
- Employer Health Tax (EHTமுதலாளிகளின் சுகாதார வரி) விலக்குக்கு முன்மொழியப்பட்ட தற்காலிக அதிகரிப்பின் மூலம் சுமார் 57,000 முதலாளிகளுக்கு $355 மில்லியன் தொகையைக் குறைத்தல்.
- Low-income Energy Assistance Program இற்கான(LEAP – குறைந்த-வருமானம் கொண்டவருக்கான எரிசக்தி உதவித் திட்டம்) தகுதியை விரிவாக்குவதன் மூலம் குடும்பங்களுக்கு அவர்களின் எரிசக்திக் கட்டணங்களுக்கு $9 மில்லியன் தொகையை நேரடி உதவியாக வழங்குதல். COVID-19 பரம்பலின் போது, கட்டணம் செலுத்தப்படாத காரணத்தால் அவர்களின் மின்சாரம் மற்றும் இயற்கை எரிவாயு சேவைகள் துண்டிக்கப்படாதிருப்பதனை உறுதி செய்தல்.

- சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள், காவற்துறை அதிகாரிகள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் சீர்திருத்த அதிகாரிகள் போன்ற முன்னணி-நிலையில் பணிபுரியும் பெற்றோருக்கு ஆதரவாக, அவசரகால குழந்தைக் காப்பகத் தெரிவுகளை வழங்குதல்.
- இந்தப் பொது சுகாதார அவசரகால சமயத்தில், உணவு மற்றும் வாடகை போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப், பொருளாதார கஷ்டங்களை எதிர்கொள்ளும் மக்கள் மற்றும் அநேகமானோருக்கு உதவுமுகமாக, Ontario Works நிர்வகிக்கும் அவசரகால உதவித் திட்டத்திற்கான நிதி உதவியை வழங்குவதற்கான அணுகலை விரிவுபடுத்துதல்.
- உணவு வங்கிகள், வீடற்றோர் தங்குமிடங்கள், தேவாலயங்கள் மற்றும் அவசர சேவைகள் போன்ற தொண்டு மற்றும் இலாப நோக்கற்ற சமூக சேவை அமைப்புகளுக்கு, அவர்களின் திறனை மேம்படுத்துவதற்கு $148 மில்லியன் தொகையால் நிதியுதவியை அதிகரித்தல். COVID-19 க்கு முகம்கொடுக்கும் வண்ணம், உள்ளூர் தேவைகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக, Consolidated Municipal Service Managers (ஒருங்கிணைந்த நகரசபை சேவை மேலாளர்கள்) மற்றும் District Social Service Administration Boards (மாவட்ட சமூக சேவை நிர்வாக சபைகள்) ஆகியவற்றுக்கு நேரடியாக நிதி வழங்குவதன் மூலம் இது செய்யப்படும்.
- Ontario Student Assistance Program (OSAP – ஒன்ராறியோ மாணவர் உதவித் திட்டம்) இன் கடன் மற்றும் வட்டி அதிகரிப்பிலிருந்து ஆறு மாத காலத்துக்கு மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம், அவர்களின் கைகளில் பணப்புழக்கத்தைக் கூட்டுதல்.
- முன்மொழியப்பட்ட புதிய Corporate Income Tax Credit (கூட்டுநிறுவன வருமான வரிக் கடன்), Regional Opportunities Investment Tax Credit (பிராந்திய வாய்ப்புகள் முதலீட்டு வரிக் கடன்) ஆகியன மூலம் தொழில் வாய்ப்பு வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளை ஆதரிக்க உதவுதல்.
- நிதித் தேவையுள்ள நகர்ப்புறப் பழங்குடியினருக்கான அவசர உதவி, சுகாதாரப் பராமரிப்பு நிபுணர்களுக்கான செலவுகள் மற்றும் முக்கியமான பொருட்கள் என்பன தொலைவிலுள்ள பழங்குடியினரின் இடங்களை அடைவதற்காக, பழங்குடி மக்கள் மற்றும் சமூகங்களுக்கு $26 மில்லியன் தொகையான மேலதிக உதவியை வழங்குதல்.

வரவிருக்கும் மாதங்களில் பணப்புழக்கத்தை மேம்படுத்த வரி மற்றும் பிற ஒத்திவைப்புகள் மூலம் மக்கள் மற்றும் வணிகங்களுக்கு $10 பில்லியன் தொகை உதவியை வழங்கும் பின்வரும் நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் திட்டத்தில் உள்ளடங்கும்:

- வணிகங்களுக்கு ஐந்து மாத வட்டி மற்றும் அபராத நிவாரணம் வழங்குவதன் மூலம் $6 பில்லியன் தொகையைக் கிடைக்கச் செய்தல், மற்றும் மாகாணத்தால் நிர்வகிக்கப்படும் பெரும்பான்மையான வரிகளுக்குப் பணம் செலுத்துதல்.

- வரவிருக்கும் ஜூன் 30 இல், காலாண்டு நகரசபைக் கல்விச் சொத்து வரிகளைப் பாடசாலை சபைகளுக்கு 90 நாட்களுக்குத் தள்ளிவைப்பதன் மூலம் $1.8 பில்லியனுக்கும் அதிகமான தொகையை நகரசபைகள் பயன்படுத்துவதற்கு வேண்டிய நெகிழ்வுத்தன்மையை இது வழங்கும், இது குடியிருப்பாளர்களுக்கும் வணிகங்களுக்கும் சொத்து வரி ஒத்திவைப்புகளை வழங்கும் அதே சமயத்தில் பாடசாலைச் சபைகள் தொடர்ந்து தங்கள் நிதியைப் பெறுவதனை உறுதிசெய்கின்றது.
- Workplace Safety and Insurance Board (WSIB – **பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபை**) மூலம் $1.9 பில்லியனைக் கிடைக்கச் செய்வது, முதலாளிகள் ஆறு மாதங்கள் வரைக் கொடுப்பனவுகளைப் பின்போட அனுமதிக்கின்றது.

"வணிகங்கள் மற்றும் மக்களுக்கான சுமையைக் குறைக்க நாங்கள் பொறுப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்" என அமைச்சர் Phillips கூறினார். "இந்த நடவடிக்கைகள் யாவும் ஒருமித்து, வணிகங்களுக்கும் மக்களுக்கும், நிச்சயமற்ற இந்தக் காலங்களில் $10 பில்லியன் தொகை வரையான பணப்புழக்கத்தை ஏற்படுத்தும், இது தொழில்கள் மற்றும் வீட்டு வரவு செலவுத் திட்டங்களைப் பாதுகாக்க உதவும்."

**தரவுகள் விரைவுப் பார்வை**

- மார்ச் 2020 க்கான பொருளாதார மற்றும் நிதிப் புதுப்பித்தல் எதிர்வரும் ஆண்டிற்கான திட்டமிடல் அனுமானங்களை வழங்குகின்றது. மாகாணத்தின் நிதி மற்றும் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் ஒழுங்கமைந்த புதுப்பித்தல்களை, ஆண்டு முழுவதும் அரசாங்கம் வழங்கும்.
- *2019-20 ஆம் ஆண்டில் மாகாணம் $9.2 பில்லியன் தொகைப் பற்றாக்குறையை முன்வைக்கின்றது, இது 2019 வரவுசெலவுத் திட்டத்துடன் ஒப்பிடும்போது $1.1 பில்லியன் தொகையால் முன்னேற்றம். கண்டுள்ளது.* COVID-19 பரம்பலுக்கான எதிர்கொள்ளலின் விளைவாக, 2020–21இல் $20.5 பில்லியன் தொகைப் பற்றாக்குறையை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- 2020-21இல் ஒன்ராறியோவின் $2.5 பில்லியன் ஒதுக்கீடு இதுவரைவரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.
- நவம்பர் 15, 2020 க்குள் மாகாணத்தின் பல-ஆண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டத்தை அரசாங்கம் வெளியிடும். இந்தப் பொறுப்பான அணுகுமுறையானது, அரசாங்கம் தொடர்ந்து பொருளாதார நிலைமையை மதிப்பிடுவதற்கும், மிக சமீபத்திய மற்றும் நம்பகமான தரவுகளின் அடிப்படையில் நீண்ட-காலக் கண்ணோட்டத்தை முன்வைப்பதற்கும் அனுமதிக்கும்.

**மேலதிக வளங்கள்**

- *ஒன்ராறியோவின் செயற் திட்டம்: COVID-19 க்கு முகம் கொடுத்தல் (மார்ச் 2020 பொருளாதார மற்றும் நிதி புதுப்பிப்பு*
- *COVID-19 பற்றிய தகவல்கள்*

---

**ஊடகத் தொடர்புகள்**

**Emily Hogeveen**
அமைச்சர் அலுவலகம்
647-294-6166
Emily.Hogeveen@ontario.ca

**Scott Blodgett**
தகவற்தொடர்புப் பிரிவு
416-728-9791
Scott.Blodgett@ontario.ca

**ontario.ca/finance-news**
*Disponible en français*